DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.388/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | பூபதி |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 20.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், துத்திக்குலத்தில் குடியிருந்து நான் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அப்பா ஆவார். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஆவணத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. **(**புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது எனது அம்மா லட்சுமி பெயரில் உள்ள 2 1/4 செண்ட் நிலத்தை எனது அப்பா பெயருக்கு மாற்றி கொடுக்கும்படி எனது அம்மாவிடம் எனது அப்பா பிரச்சனை செய்து வந்தார் என்றும், இந்நிலையில் கடந்த 09.08.2024ம் தேதி இரவு 07.30 மணிக்கு எனது அப்பா செந்தில் குடிபோதையில் எனது அம்மாவிடம்

வீட்டு நிலத்தை என் பெயரில் எழுதி தரமாட்டாயா கண்டார ஓலி தேவடியா நாதேரி முண்ட என்று கெட்ட வார்த்தையால் திட்டி வீட்டில் இருந்த எனது போனை எடுத்து எனது அம்மாவிடம் தலைவாசலில் உள்ள சம்மந்திக்கு போன்போட்டு கொடு என கூறியதாகவும், அதற்கு எனது அம்மா மறுத்தபோது எனது அப்பா ரூ.10,000/- மதிப்புள்ள எனது செல்போனை கீழே போட்டு உடைத்துவிட்டதாகவும், அது பற்றி எனது அப்பாவிடம் கேட்டபோது கையில் வைத்திருந்த கடப்பாறை கம்பியால் எனது வலதுபக்க தலையில் அடித்ததாகவும், மீண்டும் எனது இடது கை மணிகட்டில் அடித்ததாகவும், பின்பு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சமாதானமாக சென்றுவிட்டோம். சமரச மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**சமரச மனு அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**